DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.28/2024**

அ.சா.5

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ரவிகணேஷ் | Caste: | |
| Father's Name: | கருப்பணன் | Calling: | தூய்மை பணியாளர், இராமேஸ்வரம் நகராட்சி |
| Village: | ஒன்டிவீரன்நகர், இராமேஸ்வரம் | Religion: | |
| Taluk: | | Age: | 39 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 08.10.2025

( 2 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 1,3 எதிரிகள் ஆஜர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் இராமேஸ்வரம் ஒன்டிவீரன் நகரில் வசித்து வருகிறேன். இராமேஸ்வரம் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 சிவா என் அக்கா மகன். அ.சா.3 தினேஷ் என் மகன். அ.சா.2 தமிழரசி என் அக்கா. சாட்சி பிரியங்கா அ.சா.1 சிவாவின் மனைவி. அ.சா.4 வேலம்மாள் என் மனைவி. நாங்கள் இந்து பட்டியல் இனத்தை சேர்ந்த அருந்ததியர் சமூகத்தை சார்ந்தவர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் இந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த நாடார் சமூகத்தை சேர்ந்தவர்கள். நாங்கள் வசிக்கும் பகுதியில் எங்கள் சமூகத்தை சேர்ந்த 100 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். நாடார் சமூகத்தை சேர்ந்த 3 குடும்பங்கள் மட்டும் எங்கள் பகுதியில் வசித்து வருகிறார்கள். எதிரிகள் வசிக்கும் பகுதி ஜீவாநகர். ஒன்டிவீரன் நகருக்கு தெற்கே ஜீவாநகர் உள்ளது. கடந்த 02.04.2024 ம் தேதி இரவு நான் வீட்டில் இருந்தேன்.

அப்போது என் மனைவி வேலம்மாள் என்னை வந்து எழுப்பினார். நான் மருத்துவமனைக்கு சென்று வருகிறேன் என்றார் நான் எதற்கு என்று கேட்டேன். அப்போது எனது மனைவி என் அக்கா மகன் சிவாவை ஆஜர் எதிரிகள் அசிங்கமாக பேசி சாதியை சொல்லி திட்டி கத்தியால் குத்தி காயப்படுத்தியிருப்பதாகவும் சிவாவை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாக கூறினார். நான் மறுநாள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்று என் மருமகனை பார்த்தேன். நான் பார்த்தபோது என் மருமகனுக்கு இடது நெஞ்சிலும், மூக்கிலும், இடது கை முதுகிலும் காயங்கள் இருந்தன. இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>1, 3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

அ.சா.1 முதல் 4 சாட்சிகள் எனக்கு இரத்த உறவுகள் என்றால் சரிதான். அ.சா.4 வேலம்மாள் என் மனைவி என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் நிறைய வீடுகள் உள்ளன என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கும் என் வீட்டிற்கும் 200மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். சுமார் 3 சந்துகள் தள்ளி உள்ளது. சம்பவம் குறித்து என் மனைவி சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவத்திற்கு மறுநாள் நான் மருத்துவமனைக்கு சென்ற நேரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு சென்றபோது அ.சா.1 சிவா என்னுடன் பேசும் நிலையில் இல்லை என்பதால் பேசவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வீட்டில் உள்ளவர்கள்

சொன்னதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவம் குறித்து எனக்கு தெரிந்ததை சொல்ல வந்தேன். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும் அ.சா.1 எனக்கு உறவினர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1,3 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.28/2024**

அ.சா.6

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கணேசன் | Caste: | |
| Father's Name: | செப்பியப்பன் | Calling: | ரூம்பாய் |
| Village: | ஒன்டிவீரன் நகர் , இராமேஸ்வரம் | Religion: | |
| Taluk: | | Age: | 24 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 08.10.2025

(2ம் எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 1,3 எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் இராமேஸ்வரம் ஒன்டிவீரன் நகரில் வசித்து வருகிறேன். லாட்ஜில் ரூம் பாயாக வேலை செய்து வருகிறேன். சாட்சி சோனைமுத்துவை தெரியும். அ.சா.1 சிவா கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விாசரித்தார்களா என்றால் சம்பவம் நடந்த மறுநாள் 03.04.2024ம் தேதி காலை 6-7.00மணியளவில் என் வீட்டில் இருந்தபோது டிஎஸ்பி அங்கு வந்து சம்பவம் நடந்த இடத்தை கேட்டார்கள். நான் சம்பவ இடத்தை காட்டினேன். அங்கு வரைபடம் வரைந்தார். பிறகு என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார். அதன்பிறகு என் சித்தப்பா சோனைமுத்துவிடம் கையெழுத்து வாங்கினார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என் கையெழுத்துதான். பார்வை மகசர் **அ.சா.ஆ.2.** வேறு எதுவும் என் முன்னிலையில் டிஎஸ்பி கைப்பற்றவில்லை. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

**1,3 ம்எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னிடம் போலிசார் கையெழுத்து வாங்கிய பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் எங்கு வைத்து வரைந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். சம்பவ இடத்தில் வைத்து எழுதினார்கள், கையொப்பம் பெற்றார்கள். நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேனா என்றால் நான் வேலை பார்த்த இடத்திலிருந்து திரும்பி வரும்போது என்னிடம் வாங்கினார்கள். யார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் டிஎஸ்பி வாங்கினார். டிஎஸ்பி எப்போது வந்தார் என்றால் காலை 6.00 மணி. சம்பவ இடத்தில் நான் இல்லை என்பதாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் நான் கையெழுத்திட்ட பேப்பரில் என்ன எழுதியுள்ளார்கள் என்ன வரைந்துள்ளார்கள் என்று தெரியாது என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

**2 ம்எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1,3 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.28/2024**

அ.சா.7

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சோனைமுத்து | Caste: | |
| Father's Name: | முனியாண்டி | Calling: | விவசாயம் |
| Village: | ஒண்டிவீரன் நகர் , இராமேஸ்வரம் | Religion: | |
| Taluk: | | Age: | 45 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 08.10.2025

(2ம் எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டார். 1,3 எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் இராமேஸ்வரம் ஒண்டிவீரன் நகரில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி கணேசனை தெரியும். கடந்த 03.04.2024ம் தேதி காலை 6.00 மணியளவில் இராமேஸ்வரம் ஒண்டிவீரன் நகரில் உள்ள சக்திவேல் வீட்டின் முன்பு நானும் கணேசனும் நின்று பேசிகொண்டிருக்கும்போது டிஎஸ்பி வந்தார். அவர் அந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார். அதற்கு சாட்சியாக என்னிடமும் கணேசனிடம் கையெழுத்து வாங்கினார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என் கையெழுத்துதான். மறுநாள் டிஎஸ்பி மீண்டும் வந்து என்னிடம் ஒரு கையெழுத்து கேட்டார். நான் எதற்கு என்று கேட்டபோது விசாரித்ததற்கு சாட்சியாக கையெழுத்து போடும்படி சொன்னார். என் முன்னிலையில் டிஎஸ்பி பொருட்கள் எதுவும் கைப்பற்றினாரா என்றால் நான் பார்க்கவில்லை.

**1,3 ம்எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காவல்நிலையத்தில் வைத்துதான் போலிசார் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 3 ம் தேதி விசாரித்தார்கள். போலிசார் என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள், வேறு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான்.

**2 ம்எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1,3 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)